IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.331/2026

Deposition of Witness PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜோசப்ராஜ் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு இருப்புப் பாதை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.12.2026 அன்று நானும் இருப்புப் பாதை காவல் நிலைய காவலர் சதீஷ்குமார் என்பவருடன் குற்ற தடுப்பு பணியில் இருந்த சமயம் சிறப்பு உதவி ஆய்வாளர் ஸ்ரீதர் என்பவர் காலை சுமார் 8.15 மணிக்கு ஈரோடு ரயில் நிலைய முகப்பு வாயில் சென்று குற்றம் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக என்னை அழைத்துச் சென்றார். நாங்கள் முகப்பு வாயிலில் உள்ள வாகன நிறுத்தம் இடப் பகுதிக்கு சென்று கண்காணித்த போது எங்களைப் பார்த்தவுடன் ஒரு நபர் ஓட முயற்சி செய்தார். நானும் காவலர் சதீஷ்குமார் என்பவரும் அவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் ஸ்ரீதரிடம் ஒப்படைத்தோம்.

அந்த நபரை உதவி ஆய்வாளர் விசாரித்த போது தனது பெயர் கருணா என்று கூறினார் . மேலும் அவரை விசாரித்த போது 27.10.2025 அன்று திருச்சி பேசஞ்சரில் ஈரோடு வந்தபோது, ஈரோடு ரயில் நிலையம்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.17 18:21:39 +0530

வருவதற்கு சற்று நேரம் முன்பாக இரவு சுமார் 7.30 மணியளவில் பெயர், விலாசம் தெரியாத ஒரு பயணியிடம் இருந்து கருப்பு கலர் பேக்கை எடுத்துக்கொண்டு அதிலிருந்த ஸ்கை புளு கலர் ரெட்மி மொபைல், மற்றும் 2000 ரூபாய் பணம் எடுத்துக்கொண்டு பேக்கை ரயிலில் இருந்து வெளியே தூக்கி எறிந்ததாக கூறினார். மேலும் அவரை விசாரித்த போது 10.10 மணிக்கு தான் குற்றத்தை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

10.15 மணிக்கு சண்முகம், ஜாபர் சாட்சிகளின் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதே சாட்சிகள் முன்னிலையில் 11.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. அன்றைய தினம் ஆஜர் எதிரியை தான் கைது செய்து ஆஜர் எதிரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் எதிரியை நிலையம் அழைத்துச் செல்ல நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எனது உயர் அதிகாரிகளின் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.17 18:21:47 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.331/2026

Deposition of Witness PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : ஸ்ரீதர் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது போத்தனூர் இருப்பு பாதை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.10.2025 அன்று ஈரோடு இருப்புப்பாதை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மதியம் 12 மணிக்கு கோபாலன் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.191/25, சட்டப்பிரிவு 305(c) BNS படி வழக்கு பதிவு செய்து அசல் புகாரை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னிட்டு வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கு சம்பவம் ஓடும் ரயிலில் நடைபெற்றதால் நான் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆவணம் எதுவும் தயார் செய்யவில்லை. பின்னிட்டு 31.10.2025 அன்று காலை 8.10 மணிக்கு வழக்கு சம்பந்தமாக இந்த வழக்கின் எதிரியை தேடி தலைமை காவலர் ஜோசப் ராஜ் மற்றும்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.17 18:21:56 +0530

இரண்டாம் நிலை காவலர் சதீஷ்குமார் ஆகியோருடன் நடைமேடை மற்றும் ஈரோடு ரயில் நிலைய முன்புறம் உள்ள பூங்கா ஆகிய பகுதிகளில் செல்லும் போது, ஈரோடு ரயில் நிலைய முகப்பு வாயிலில் உள்ள பூங்கா பகுதியில் சந்தேகப்படும்படியாக இருந்த ஒரு நபரை அழைத்து விசாரித்த போது அவர் தனது பெயர் கருணா என கூறினார்.

அவரை மேலும் விசாரிக்க முன்னுக்குப் பின் முரணாக கூறிய வரை 35(3) BNSS அழைப்பாணை கொடுத்து விசாரணைக்கு அழைத்த போது அவர் அழைப்பாணையை பெற மறுத்து ஓட முயற்சி செய்தவரை காவலர்கள் சகிதம் எதிரியைப் பிடித்து கைது செய்ததற்கான காரணத்தை கூறி இரண்டு மணி நேரம் கால அவகாசம் கொடுத்து விசாரணைக்கு ஒத்துழைக்காமல் ஓட முற்பட்ட வரை அதே இடத்தில் காலை 10.15 மணிக்கு கைது செய்தேன். பின்பு மேலும் விசாரித்த போது ஆஜர் எதிரி எவ்வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தையும் இன்றி தானாக முன்வந்து தமிழ் மொழியில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 10.20 மணி முதல் 11.10 மணி வரை சாட்சிகள் சண்முகம் மற்றும் ஜாபர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

பின்பு 11.10 மணி முதல் 11.45 மணி வரை அவர் வசம் வைத்திருந்த ப்ளூ கலர் ரெட்மி மொபைல் ஃபோனை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்பு எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேற்படி வழக்கின் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு சாட்சிகள் கோபாலன், ரேவதி, ஜாபர் ஜோசப் ராஜா, சதீஷ்குமார் , சண்முகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.17 18:22:03 +0530

பதிவு செய்தேன். பின்னிட்டு எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காணாமல் போன மொபைல் போனில் எண் புகாரிலோ முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மொபைல் போனில் IME ஏன் குறித்து ஆவணங்கள் எதுவும் புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எதிரி சென்னையில் இருந்து எர்ணாகுளம் செல்வதாக தான் ஒப்புதல் வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் சென்னையில் இருந்து திருச்சி சென்று திருச்சியில் இருந்து எர்ணாகுளம் செல்வதற்காக ஈரோடு வந்ததாக சொல்லியுள்ளார். சென்னையிலிருந்து எர்ணாகுளம் செல்லும் வழி தான் நேர்வழி என்றால் சரிதான். திருச்சியில் இருந்து எர்ணாகுளம் செல்வது சுற்று வழி என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் எதிரி திருச்சி ரயிலில் வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என்னால் கைப்பற்றப்படவில்லை என்றும், சேலம் போலீசாரால்தான் கைப்பற்றப்பட்டது என்றும் சொன்னாள் சரியல்ல. சேலம் போலீசார் தான் கைப்பற்றினார்கள் என்றும், சேலம் போலீசார் இடம் தான் புகார் அடையாளம் காட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எதிரி குடிபோதையில் ஈரோடு ரயில் நிலையத்தில் இருந்ததால் அவர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி பொது மக்களுக்கு இடையூறு எதுவும் ஏற்படுத்திவிடுவார் என்பதற்காக எதிரி மீது நாங்களாக பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளோம்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.17 18:22:10 +0530

என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மொபைல் போன் காணாமல் போனதாக சொல்லப்படும் சமயம் எதிரி சென்னையில் இருந்தார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.17 18:22:15 +0530